BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது குடியிருப்பு வாசிகள் செலுத்த வேண்டிய வரிகளைத் தள்ளிப்போடவும் அனைத்து அபராதங்களிலிருந்தும் ஐந்து மாதங்களுக்கு அவர்களுக்கு விலக்கு கொடுக்கவும் முடிவு செய்திருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 21, 2020) –இன்றைய தினம், கோவிட் - 19 (COVID-19) தொற்று பரவல் ஏற்படுத்திய தாக்கத்தை குறைக்கும் வகையில் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாக அமைப்பினர், மார்ச் 18 முதல் ஆகஸ்ட் 19, 2020 வரையிலான ஐந்து மாத காலத்திற்கு வரி செலுத்தும் தொகைகள் மீதான வட்டி, மற்றும் தாமதக் கட்டணம் ஆகியவற்றுக்கு விலக்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த முடிவானது எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் ஒரு மாமன்றக் கூட்டத்தின்போது வரன்முறைப்படுத்தப்படும்.

நகரின் அவசரகால மேலாண்மை திட்டத்தின், பிரிவு 3.8 இன் கீழ், கோவிட்-19 (COVID-19) தொற்று நோய் பரவல் போன்ற ஒரு அவசர காலத்தின் போது, “ ப்ராம்ப்ட்டன் நகரின் ஆளுமை எல்லைக்குள்ளாக இருக்கும் உயிர்கள், சொத்துக்கள், சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரத்தை பாதுகாத்து பத்திரப்படுத்தத் தேவைப்படலாம் எனும்போது”, இப்படியான நடவடிக்கைகளை எடுக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிவிப்பும், ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்துச் சேவைகளில் மாற்றங்கள் சம்பந்தமான அறிவிப்பும், நமது சமுதாயத்தினரின் பாதுகாப்பு மற்றும் நல வாழ்வு ஆகியவற்றை உறுதி செய்வதற்காக, கோவிட்-19 (COVID-19) அவசர காலத்தின் போது நகரின் முன்னுரிமை கொண்ட விஷயங்களுடன் சீராக ஒத்துப்போகின்ற விஷயங்களாகும்.

குடியிருப்பு வாசிகளும் தொழில் செய்பவர்களும் பின் வருவனவற்றை மனதில் கொள்ள வேண்டும்:

- மார்ச் 18 ஆம் தேதிக்கு தவணை பாக்கியாக இருக்கும் இரண்டாவது தவணை வரிகளுக்கு, வட்டியோ அல்லது தாமதக் கட்டணமோ விதிக்கப்பட மாட்டாது; ஏப்ரல் 22 ஆம் தேதிக்கு ஏற்படுகின்ற மூன்றாம் தவணைக்கும் இப்படி வட்டியோ அல்லது தாமதக் கட்டணமோ விதிக்கப்படமாட்டாது.

- தங்களின் ஏப்ரல் மாத வரித்தவணைக்காக பின் தேதியிட்ட காசோலைகள் அனுப்பி, இப்போது பணம் செலுத்தலை ரத்து செய்ய விரும்புபவர்கள் ஏப்ரல் 15 ஆம் தேதிக்குள் 311 என்ற எண்ணை அழைத்து அந்தக் காசோலையை ரத்து செய்து கொள்ளலாம்.
- ஏப்ரல் 1, 15 மற்றும் 22 தேதிகளுக்கான தவணைத் தொகைகள் வங்கிகளின் மூலம் செலுத்த முன் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால் அவை திரும்பப் பெற்றுக் கொள்ளப்படும். மே மாத வரி செலுத்தலுக்கு முன் அதிகாரம் கொடுத்தவர்கள், 311 என்ற எண்ணை அழைத்து, தாங்கள் தவணை செலுத்துவதை ரத்து செய்து கொள்ளலாம். பின்னொரு தேதியில் தொகை செலுத்துவதற்கான முன் அதிகாரத்தை மீண்டும் அமல் படுத்த, பணம் செலுத்த வேண்டியவர், நகரின் நிர்வாகத்திடம் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.
- செலுத்தப்படும் வரித்தொகைகள் நகரின் நிர்வாகத்தினரால் தொடர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு செய்முறைப்படுத்தப்படும். விருப்பத்தேர்வுகளுக்கான முழு பட்டியலை இங்கு பார்வையிடவும்

ஏதேனும் விசாரணைகளுக்கு , இந்தப் படிவத்தை உபயோகிக்கவும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“இந்த தொற்று நோய்ப் பரவலின்போது, நமது குடியிருப்பு வாசிகள் எதிர்கொள்ளக்கூடிய நிதிரீதியான சிரமம் மற்றும் மனவலியை ப்ராம்ப்ட்டன் நகர் மன்ற நிர்வாகம் புரிந்துகொண்டிருக்கிறது. இதனால்தான் ஐந்து மாதங்களுக்கு அபராதம் ஏதுமில்லாமல் சொத்து வரி செலுத்தலை தள்ளிப்போடுதலுக்கான வாய்ப்பினை ஒவ்வொரு குடியிருப்புவாசிக்கும் நாங்கள் வழங்குகிறோம். நாங்கள் உங்களுக்காகவே உழைக்கிறோம்; இந்தப் பொருளாதார சிரமத்தின்போது, இதைத்தான் சமூகத்தினர் நினைத்தனர் என்பது எங்கள் காதில் பலத்த குரலாக தெளிவாகவே கேட்டது.”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நகர நிர்வாகமானது, சமூகத்தினரின் தேவைகளைத்தான் முதல் நிலையில் வைத்துள்ளது, குறிப்பாக இப்படியொரு சவாலான காலத்தில். ப்ராம்ப்ட்டன் நகரவாசிகள் மற்றும் அதில் தொழில் செய்பவர்களுக்கு நாங்கள் மிகச்சிறந்த முறையில் விரைவாகவும் திறம்படவும் செவிசாய்க்கிறோம். நகரின் பல வசதியமைப்புக்களும் மூடப்பட்ட நிலையில், பல்வேறு சேவைகள் மற்றும் ஆதரவுகள் மாற்று வழிமுறைகளில் கிடைத்தபடியே இருக்கின்றன.”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம்*



The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**

மோனிக்கா துக்கல்

ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு

யுக்திரீதியான தகவல் தொடர்பு

ப்ராம்ப்ட்டன் நகரம்

*905-874-3426 | Monika.Duggal@brampton.ca*

M
M
C
S
C
9